# தகவல் கொத்து
# Information Booklet

2025

**தமிழ் எம் அடையாளம்**

வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

Wentworthville Tamil Study Centre Inc.

www.wtsc.org.au

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| **பாடசாலையில் மாணவர்களைச் சேர்த்தல்** | **4** |
| **மாணவர்களின் வயது எல்லை** | **4** |
| **மாணவர்களின் வகுப்புகள்** | **4** |
| **மாணவர்களின் பாடப்புத்தகங்கள்** | **5** |
| **பாடசாலை அறிவித்தல்கள்** | **5** |
| **நிதி உதவி** | **6** |
| **தகவல்களை சேகரித்தல்** | **6** |
| **மாணவர் ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடுகள்** | **6** |
| **ஆசிரியர் மற்றும் அதிபர் விருதுகள்** | **7** |
| **மதிப்பீடுகள்** | **7** |
| **மீள் மதிப்பீடு (Reassessment)** | **7** |
| **தொடர் மதிப்பீடுகள்** | **8** |
| **போட்டிகள்** | **10** |
| **பேச்சும் வாய்மொழித் தொடர்பாடலும் போட்டி** | **10** |
| **தமிழ் அறிவு (வினா விடை) போட்டி** | **10** |
| **பரிசில்கள் வழங்குவதற்கான விதிமுறைகள்** | **10** |
| **அமைச்சர் விருது (Minister Award)** | **11** |
| **மாணவ முதல்வர்கள்** | **11** |
| **உயர் தரம் (HSC)** | **11** |
| **நியூ சவுத் வேல்ஸ் கல்வித் திணைக்களத்தின் தமிழ் பாடத்திட்டம்** | **13** |
| **முன்னைய பதிப்புகள்** | **14** |



பதிப்பக உரிமையாளர்:
வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
த. பெ. இல 557
வென்றவேத்வில்
நியூ சவுத் வேல்ஸ் 2145, அவுஸ்திரேலியா

Publication rights to:
Wentworthville Tamil Study Centre Inc.
PO Box 557, Wentworthville
NSW 2145
Australia


அன்பார்ந்த பெற்றோர்களே,

இந்தத் தகவல் கொத்து நமது கல்வி நிலையம் சம்பந்தமான தகவல்களையும், கற்கை நெறி சம்பந்தமான தகவல்களையும், நமது கல்வி நிலையத்தின் அன்றாட மற்றும் விசேட நடவடிக்கைகளையும் பெற்றோர், பாதுகாவலருக்கு விளக்கும் நோக்குடனும் அவர்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை அறியத்தரும் நோக்குடனும், தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

இதில் ஏதாவது திருத்தங்கள், மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டிய விடயங்கள், தகவல்கள் இருப்பதாக நமது அங்கத்தவர்கள் கருதினால் அதை செயற்குழுவின் கவனத்திற்குக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இந்த தகவல் கொத்து ஒரு வழிகாட்டியாக மட்டும் அமைவதோடு, தற்போதைய பாடசாலை நிலைமை காரணமாக இத் தகவல் கொத்து தொடர்ந்தும் மாற்றத்திற்குள்ளாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

நன்றி.

செயற்குழு

வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்.

## பாடசாலை வளாகம்,வகுப்புகள் மற்றும் நேரம்

| **வளாகம்** | **வகுப்புகள்** | **பாடசாலை நேரம்** |
|---|---|---|
| WTSC MRPS Campus<br>Metella Road Primary School (MRPS)<br>117-131 Metella Road,Toongabbie NSW 2146 | பாலர் பள்ளி, முன்பள்ளி, ஆரம்பப்பள்ளி மற்றும் ஆண்டு 1 முதல் ஆண்டு 4 வரை. | நியூ சவுத்வேல்ஸ் பாடசாலைத் தவணைகளில் வரும் சனிக்கிழமைகளில் பிற்பகல் 2:00 மணி தொடக்கம் 4:30 மணி வரை |
| WTSC PHHS Campus<br>Pendle Hill High School (PHHS)<br>66 Binalong Rd, Toongabbie NSW 2146 | ஆண்டு 5 முதல் ஆண்டு 10 வரை, இணைப்பு வகுப்புகள் மற்றும் ஆண்டு 10 HSC முதல் ஆண்டு 12 HSC வரை. | நியூ சவுத்வேல்ஸ் பாடசாலைத் தவணைகளில் வரும் சனிக்கிழமைகளில் பிற்பகல் 1:30 மணி தொடக்கம் 5:30 மணி வரை |
| WTSC GPS Campus<br>Girraween Public School (GPS)<br>9 Bando Road, Girraween NSW 2145 | ஆண்டு 11 HSC மற்றும் ஆண்டு 12 HSC மாணவர்களுக்கான மேலதிக வகுப்புக்கள். | நியூ சவுத்வேல்ஸ் பாடசாலைத் தவணைகளில் வரும் வியாழக்கிழமைகளில் மாலை 7.00 மணி தொடக்கம் 9.00 மணி வரை |

** அனைத்து வகுப்புகளும் பாடசாலை நேரங்களும் சூழ்நிலைக்கேற்ப மாற்றத்துக்குரியது என்பதை கவனத்தில் கொள்ளவும்

தொடர்புகளுக்கு :

| | |
|---|---|
| **Postal Address / அஞ்சல் முகவரி** | Wentworthville Tamil Study Centre Inc.<br>PO Box 557, Wentworthville NSW 2145 |
| **Email / மின்னஞ்சல்** | info@wtsc.org.au |
| **Website / இணையத்தளம்** | www.wtsc.org.au |
| **Whatsapp** / புலனம் | **+61 491 894 874** |
| **Facebook / முகப்புத்தகம்** | www.facebook/tamilstudy |
| **Mobile Phone / கைப்பேசி** | **+61 491 894 874** **+61 456 778 823**<br>(Only on Saturdays during school hours) |

# பாடசாலையில் மாணவர்களைச் சேர்த்தல்

மாணவர்களை வருட ஆரம்பத்தில் பாடசாலையில் சேர்ப்பது பெரிதும் வரவேற்கப்படுகின்றது. இவ்வாறு சேர்ப்பதன் மூலம் மாணவர்கள், பாடசாலையில் கற்பிக்கப்படும் பாடங்களை இலகுவாக ஆரம்பத்திலிருந்தே கற்கக்கூடியதாகவும் சக மாணவர்களுடன் நன்கு அறிமுகம் செய்து கொள்ள ஏதுவாகவும் இருக்கும். இது பாடசாலையை இடையூறின்றி சிறப்பாக நடாத்த உதவுவதுடன் தங்கள் பிள்ளை சார்பான அரச மானியத்தையும் பாடசாலை பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். அத்துடன் பாடசாலையில் நடைபெறும் பல்வேறு போட்டிகளில் பரிசில்களைத் தீர்மானிப்பதற்கும் கலைவிழாவில் பங்கேற்பதற்கும், பாடசாலை வரவு கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படலாம் என்பதால் பெற்றோர்கள் மாணவர்களின் வரவில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# மாணவர்களின் வயது எல்லை

நடப்பு வருடத்தின் ஆடி 31ம் திகதி அன்று (July 31st) மூன்றரை அல்லது அதற்கும் கூடிய வயதை எய்தும் சிறார்கள் அனைவரும் பாடசாலையில் சேர்ந்து கொள்ளத் தகுதி உடையவராவர்.

# மாணவர்களின் வகுப்புகள்

மாணவர்கள் பாடசாலையில் இணையும் போது, அவர்களின் வயதிற்கேற்ப தமிழ் மொழி அறிவு மதிப்பீடு செய்யப்பட்டு தகுந்த வகுப்பில் இணைத்துக்கொள்ளப்படுவார்கள். மாணவர்களின் தமிழ் மொழித்திறன் அவர்களது வயதுப் பிரிவினரிலும் குறைவாக இருந்தால் அவர்கள் இணைப்பு வகுப்புகளில் சேர்க்கப்பட்டு தனிப்பட்ட கவனத்துடன் விசேட பயிற்சி வழங்கப்பட்ட பின்னர் அவர்களது வயதுப் பிரிவினரின் வகுப்புகளிற் சேர்க்கப்படுவர். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் வகுப்பு மாற்றம் தொடர்பாக அதிபரிடம் கோரிக்கை சமர்ப்பிக்கலாம். இது பற்றிய மேலதிக விபரத்தை இணைப்பு 1 இல் உள்ள படத்தில் பார்க்கலாம்.

**1. கீழ்வகுப்புகள்**

1.1. பாலர் பள்ளி, முன் பள்ளி வகுப்புகள்

இம் மாணவர்களுக்கு வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையத்தினால் வடிவமைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கேற்ப கற்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1.2. ஆரம்ப பள்ளி முதல் ஆண்டு 6 வரையான வகுப்புகள்

நியூ சவுத்வேல்ஸ் மாநில அரசின் K - 10 பாடத்திட்டத்திற்கமைய கற்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**2. மேல்வகுப்புகள்**

2.1. ஆண்டு 7 - ஆண்டு 9 வரையான வகுப்புகள்

நியூ சவுத்வேல்ஸ் மாநில அரசின் K - 10 பாடத்திட்டத்திற்கமைய கற்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2.2. ஆண்டு 4 - 6, ஆண்டு 7- 9 மற்றும் ஆண்டு 10 RoSA வகுப்புக்கள்

Record of School Achievement (RoSA) சான்றிதழ் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் கற்கும் மாணவர்களுக்கான வகுப்புக்கள். அதாவது, குறைந்தளவேனும் தமிழில் பேச வேண்டும் என்னும் ஆர்வம் உடைய மாணவர்களுக்காக இந்த வகுப்புக்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
ஆண்டு 10 RoSA வகுப்பு மாணவர்களுக்கான RoSA சான்றிதழ் இறுதித் தவணையில் நடைபெறும் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் வழங்கப்படும்.

2.3. ஆண்டு 10 உயர்தர வகுப்பு

நியூ சவுத்வேல்ஸ் மாநில அரசின் K - 10 பாடத்திட்டத்திற்கமைய உயர்தரத்தில் தமிழை ஒரு பாடமாக எடுக்கும் நோக்கில் கற்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2.4. ஆண்டு 11 - ஆண்டு 12 உயர்தர வகுப்புகள்

உயர்தரத்தில் தமிழை ஒரு பாடமாக எடுக்கும் நோக்கில் உயர்தர பாடத்திட்டத்திற்கமைய (NESA Syllabus) கற்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
ஆண்டு 12 வகுப்பு மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா இறுதித் தவணையில் நடைபெறும்.

**3. இணைப்பு வகுப்புக்கள்**

3.1. மாணவர்களின் தமிழ் மொழித்திறன் அவர்களது வயதுப் பிரிவினரிலும் குறைவாக இருந்தால், நியூ சவுத்வேல்ஸ் மாநில அரசின் K - 10 பாடத்திட்டத்திற்கமைய, தனிப்பட்ட கவனத்துடன் அவர்களுக்கான மேலதிக பயிற்சிகள் இவ் இணைப்பு வகுப்பில் வழங்கப்பட்ட பின்னர் அவர்களது வயதுப் பிரிவினரின் வகுப்புகளுக்கு மாற்றப்படுவர்.இணைப்பு வகுப்புக்கள் (கீழ் நிலை / மேல்நிலை)

**4. வகுப்புக்களின் விளக்கப்படம் (WTSC - Class Structure)**

மாணவர்களின் வகுப்புகள் மற்றும் அதற்கான விளக்கங்களை உள்ளடக்கியதாக வரையப்பட்ட விளக்கப்படம் இணைப்பு 1இல் இணைக்கப்பட்டுள்ளது.

வகுப்புக்களின் விளக்கப்படம் **(WTSC - Class Structure)**

# மாணவர்களின் பாடப்புத்தகங்கள்

பாடப்புத்தகங்கள் மற்றும் பயிற்சிப்புத்தகங்கள் என்பன எமது கல்வி நிலையத்தினால் வழங்கப்படும். இந்நூல்கள் அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் இலவசமாக வழங்கப்படும். பாடசாலைக்கு வரும்போது மாணவர்கள் பாடசாலையினால் வழங்கப்பட்ட புத்தகங்களுடன் அப்பியாசப்புத்தகம் எழுது கருவிகள் என்பவற்றோடு வகுப்பு ஆசிரியர் குறிப்பிடும் உபகரணங்களையும் கொண்டு வருதல் வேண்டும். பாடப்புத்தகங்கள் மற்றும் பயிற்சிப்புத்தகங்கள் தொலையுமிடத்து அதற்கு மாற்றீடாக வழங்கப்படும் புத்தகங்களுக்கும் மற்றும் தன்னார்வத்தோடு மேற்கொள்ளப்படும் வகுப்பேற்றம் ஆகியவற்றிற்கும் தலா $10 அறவிடப்படும். பெற்றோர்/மாணவர்களின் விருப்பத்திற்கமைய வகுப்பு மாறும் போது தேவைப்படும் புதிய புத்தகங்களுக்கு கட்டணம் அறவிடப்படும்.

# பாடசாலை அறிவித்தல்கள்

அவ்வப்போது பாடசாலை சம்பந்தப்பட்ட அறிவித்தல்கள் செய்திமடல் (Newsletter), மின்அஞ்சல் (email), இணையத்தளம் (Website), முகப்புத்தகம் (Facebook), uEducateUs மற்றும் புலனம் (WhatsApp) மூலம் அறிவிக்கப்படும். செய்தி மடல்கள் மின்அஞ்சல் (email) மூலமாகவும் கைப்பேசி செயலி (WhatsApp) மூலமாகவும் அனுப்பப்படும்.

# நிதி உதவி

இப்பாடசாலையினை நடாத்துவதற்கு நியூ சவுத்வேல்ஸ் மாநில அரசிடமிருந்து ஒழுங்காகப் பாடசாலைக்கு வருகை தரும் மாணவர்கள் சார்பாக சிறிய தொகை நிதியுதவி கிடைக்கப்பெறுகின்றது. இந் நிதியானது குறிப்பிட்ட சில நோக்கங்களுக்காக மட்டுமே பாவிக்கப்படலாம் என்பதுடன் எமது பாடசாலையை நடாத்துவதற்கு போதுமானதல்ல. ஆகவே பெற்றோரிடமிருந்து பின்வரும் நிதி அறவிடப்படுகிறது:

ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு கல்வி ஆண்டிற்கான வசதிக்கட்டணம் $120 ஆகும். நடப்பு கல்வியாண்டின் ஆரம்பத்தில் வசதிக்கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். நியூ சவுத் வேல்ஸ் மாநில அரசினால் வழங்கப்படும் Creative Kids voucher இனை மாணவரின் நடப்பு ஆண்டிற்கான வசதிக்கட்டணத்தைச் செலுத்தப் பயன்படுத்தலாம். மேலதிக தகவல்களுக்கு **WTSC Student Fee Policy** ஐ பார்க்கவும்.

அத்துடன் மாணவர்களின் போதிய வரவின்மை காரணமாக அரசு மானியம் கிடைக்கப்பெறாதவிடத்து அந்தந்த மாணவர்களுக்குரிய மானியத் தொகையை பெற்றோர்கள் செலுத்துமாறு கேட்கப்படலாம், எனவே பெற்றோர்கள் மாணவர்களின் வரவில் கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**குறிப்பு**: வசதிக்கட்டணம் தவணை ஆரம்பத்திலேயே செலுத்தப்பட வேண்டும்.

# தகவல்களை சேகரித்தல்

எமது கல்வி நிலையத்தை நிர்வகிப்பதற்கு அவசியமானது என்று கருதப்படும் உங்களதும் இக்கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் உங்கள் பிள்ளைகளினதும் விபரங்கள் சேகரிக்கப்பட்டு களஞ்சியப் படுத்தப்படுகின்றன. இவற்றுள் சில தகவல்கள் மாணவர் கல்வி கற்கும் பாடசாலை (Mainstream School), பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் போன்றவை மாநில கல்வி திணைக்களத்தினால் நிதி உதவி வழங்குவதற்காகவும் பிற காரணங்களுக்காகவும் கோரப்படுகின்றன. அத்துடன் எமது நிலையத்தின் கல்வி, நிர்வாக தேவைகளுக்கும் இவ்விபரங்கள் பயன்படுத்தப்படும். மேலும் இத்தகவல்கள் பாடசாலை வேளையில் ஏற்படும் அவசர நிலைமைகளின் போது உங்களைத் தொடர்பு கொள்ளவும் பயன்படுத்தப்படும். முக்கியமான அறிவித்தல்கள், செய்திமடல்கள் என்பன மின்னஞ்சல் மூலமாகவே அனுப்பப்படும். மின்னஞ்சல் எமது பாடசாலையின் அலுவலக தொடர்பாடல் முறைமை என்பதால் எல்லா பெற்றோர்களும் தங்கள் நாளாந்தப் பாவனையிலுள்ள குறைந்தபட்சம் ஒரு மின்னஞ்சல் முகவரியாவது வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். அத்துடன் உங்கள் பிள்ளைகளுக்கு ஏதாவது உணவு ஒவ்வாமை (food allergy) அல்லது வேறு ஏதாவது விசேட மருத்துவத் தேவை (special medical need) இருப்பின் அதனை எமக்கு உடன் அறியத்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். உங்கள் பிள்ளைகள் “விசேட தேவை” (special need) உடையவர்களாக இருந்தால் அது பற்றிய விரிவான தகவலை எமக்குத் தருவது பெற்றோர்களின் கடமையாகும்.

# மாணவர் ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடுகள்

வகுப்பறையிலும் பாடசாலை வளாகத்திலும் மாணவர்கள் மற்றையோருக்கு இடைஞ்சல் செய்யாத வண்ணம் நடத்தல் வேண்டும். பெரியோர்களையும் சக மாணவர்களையும் மதித்து பாடசாலை விதிமுறைகளுக்கு அமைவாக எப்போதும் இருத்தல் வேண்டும். பாடசாலை சார்ந்த வெளி நிகழ்வுகளிலும் அதே ஒழுக்க முறைமை கடைப்பிடித்தல் வேண்டும். பாடசாலை விதிமுறைகளை மீறும் மாணவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

# பாடசாலை வரவு

நடப்பு வருடம் பாடசாலை தொடங்கிய நாளிலிருந்து ஆண்டிறுதி மதிப்பீடு நடக்கும் நாளுக்கு முதல் பாடசாலை நாள் வரையும் உள்ள நாட்கள் கருத்தில் கொள்ளப்படும். மூன்று (3) நாட்கள் வரவின்மைக்கு புள்ளிகள் குறைக்கப்பட மாட்டாது. மூன்று (3) நாட்களுக்கு மேற்பட்ட வரவின்மைக்கு விகிதாசாரத்திற்கு ஏற்ப புள்ளிகள் குறைக்கப்படும். பாடசாலை தொடங்கிய பின்பு, இடையில் இணைந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படமாட்டாது. வேறு தமிழ்ப் பாடசாலையில் இருந்து இடையில் இணைந்த மாணவர்கள் அந்தப் பாடசாலையில் இருந்து நடப்புக் கல்வியாண்டுக்கான வரவு விபரங்களை அப்பாடசாலையூடாக நேரடியாக ஆண்டிறுதி மதிப்பீட்டுக்கு முன்னதாக எமக்கு அனுப்பிவைப்பின் அவ்விபரம் கருத்தில் கொள்ளப்படும்.

.

# ஆசிரியர் மற்றும் அதிபர் விருதுகள்

மாணவர்கள் வகுப்பில் தமது திறமைகளை வெளிப்படுத்துதல், ஒழுக்கமாக இருத்தல், ஆசிரியர் கற்பிப்பதை கவனமாக செவிமடுத்தல், மற்றவர்களுக்கு முன்மாதிரியாக இருத்தல் போன்றவற்றிற்காக ஆசிரியரினால் மாணவர்களுக்கு ஆசிரியர் விருது வகுப்பில் வழங்கப்படும். ஐந்து ஆசிரியர் விருதுகள் பெற்ற மாணவர்கள் ஒரு அதிபர் விருதுக்கு தகமையுடையவர்களாக கருதப்பட்டு அவர்களுக்கு பாடசாலை ஒன்றுகூடலின் போது அதிபரால், அதிபர் விருது வழங்கப்படும்.
நடப்பு ஆண்டிலும் அதற்கு முந்திய ஆண்டிலும் வழங்கப்பட்ட ஆசிரியர் விருதுகள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

# மதிப்பீடுகள்

ஒவ்வொரு தவணை முடிவிலும் எழுத்து மற்றும் வாசிப்பு தவணைமதிப்பீடுகள் (Term Assessments) நடாத்தப்படும். எழுத்து மதிப்பீட்டுக்குரிய வினாத்தாள்கள் அந்தந்த வகுப்பிலுள்ள (Grade) எல்லா பிரிவு (Division) ஆசிரியர்களும் கலந்துரையாடி பொதுவான வினாத்தாளாக தயாரிக்கப்படும். வாசிப்பு மதிப்பீடு அந்தந்தப் பிரிவு (Division) ஆசிரியர்களால் மாணவர்கள் பாடத்திலுள்ள பகுதிகளை வாசிக்கக் கொடுப்பதன் மூலம் நடாத்தப்படும். வாசிப்பு மதிப்பீட்டுக்கான புள்ளிகள் அந்தந்த வகுப்புகளில் தரப்படுத்தல் (standardised) செய்யப்பட்டு இறுதிப்புள்ளிகள் கணிக்கப்படும்.

| | |
|---|---|
| முதலாம் தவணை | முதலாம் தவணை முடிவில் முதலாம் தவணை மதிப்பீடு (Term 1 Assessment) நடாத்தப்படும் |
| இரண்டாம் தவணை | இரண்டாம் தவணை முடிவில் அரையாண்டு மதிப்பீடு (Half-yearly assessment) நடாத்தப்படும், இம் மதிப்பீட்டின் புள்ளிகள் மாணவர் தேர்ச்சி அறிக்கையில் உள்ளடக்கப்படும் |
| மூன்றாம் தவணை | மூன்றாம் தவணை இறுதியில் மூன்றாம் தவணை மதிப்பீடு (Term 3 Assessment) நடாத்தப்படும் |
| நான்காம் தவணை | நான்காம் தவணை இறுதியில் ஆண்டிறுதி மதிப்பீடு (year end assessment) நடாத்தப்படும். இம் மதிப்பீட்டின் புள்ளிகள் மாணவர் தேர்ச்சி அறிக்கையில் உள்ளடக்கப்படும் |

# மீள் மதிப்பீடு (Reassessment)

மாணவர் ஒருவர் தவிர்க்கமுடியாத காரணத்தினால் மதிப்பீடு ஒன்றிற்கு வர முடியாது போனால் அல்லது வர முடியாது இருக்கும் என எண்ணுகின்ற சந்தர்ப்பங்களில் மீள் மதிப்பீடு ஒன்று பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுகின்ற சந்தர்ப்பங்களில் நடாத்தப்படும்.

1. வர முடியாமைக்கான காரணத்தை எழுத்து மூலம் அதிபருக்கு ஒரு வாரத்திற்குள் அறிவித்தல்.
2. மாணவர் மதிப்பீட்டுக்கு சமூகமளிக்காத நாளில் இருந்து இரு பாடசாலை வாரத்திற்குள் (பின்னதாக) மீள்மதிப்பீடு நடாத்தப்படுமாயின் அதில் பங்குபற்றுவதற்கு தயாராக இருத்தல்.

# தொடர் மதிப்பீடுகள்

ஆரம்பப்பள்ளி முதல் ஆண்டு 10 வரை மற்றும் இணைப்பு வகுப்புக்களில் கற்கும் மாணவர்களின் எழுத்து, வாசிப்பு, வாய்மொழி தொடர்பாடல் பகுதிகள் தொடர்ந்து நான்கு தவணைகளும் மதிப்பிடப்பட்டு வருகிறது. மாணவர்கள் ஒவ்வொரு தரத்திற்கும் முன்னேற்றப்படும்போது, அந்த வகுப்பில் தம்மை நிலைப்படுத்திக் கொண்டு வகுப்பு வேலைகளில் ஈடுபட வேண்டும் என்ற நோக்கில், ஒவ்வொரு தவணையும் அந்தந்த பகுதிகளில் பெற்ற புள்ளிகளில் இருந்து விகிதாசார அடிப்படையில் இறுதிப்புள்ளிகள் கணிக்கப்படும். விகிதாசாரமானது முதலாம், இரண்டாம் தவணைகளை விட மூன்றாம், நான்காம் தவணைகளிற்கு அதிகமாகக் கருத்தில் கொள்ளப்படும். இந்த இறுதி புள்ளிகள் பரிசளிப்பு விழாவில் எழுத்து மற்றும் வாசிப்பு பகுதிகளுக்கான பரிசில்களை தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்படும்.

### எழுத்து மதிப்பீட்டுக்குரிய (Writing Assessment) விதிமுறைகள்

1. ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடயம்(கள்) எழுதக் கொடுக்கப்படும்.
2. பங்குபற்றும் மாணவர்கள் மதிப்பீடு ஆரம்பிக்கும் முன் பாடசாலைக்கு சமுகம் அளிக்க வேண்டும்.
3. வகுப்பு ஆசிரியர்கள் வீட்டு வேலைக்கு புள்ளிகளை வழங்குவார்கள்.
4. படித்த பாடங்கள் முழுவதிலும் வெவ்வேறு பகுதிகள் அடங்கியதாக ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட வினாத்தாள்கள் பரீட்சைக்காக மாணவர்களுக்குக் கொடுக்கப்படும்.
5. ஒவ்வொரு சரியான பதில்களுக்கும் அந்தக் கேள்விக்கு ஒதுக்கப்பட்ட முழுப்புள்ளிகளும் வழங்கப்படும்.
6. எழுத்துப்பிழை,மற்றும் சொல் வாக்கிய அமைப்பு, இலக்கணம் ஆகியவற்றில் பிழைகள் இருப்பின் புள்ளிகள் குறைக்கப்படும்.
7. தொடர் மதிப்பீட்டின் இறுதிப்புள்ளிகள், கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறு கணிப்பீடு செய்யப்படும்.

| மதிப்பீட்டுக் காரணிகள் | ஆரம்பப்பள்ளி முதல் ஆண்டு 10 வரை |
|---|---|
| முதலாம் தவணை மதிப்பீடு | 15% |
| இரண்டாம் தவணை மதிப்பீடு | 20% |
| மூன்றாம் தவணை மதிப்பீடு | 25% |
| நான்காம் தவணை மதிப்பீடு | 30% |
| பாடசாலை வரவு | 10% |
| மொத்தம் | 100% |

8. **வீட்டுவேலை:-** இதற்கு ஆசிரியரினால் புள்ளிகள் வழங்கப்படும். கொடுக்கப்படும் ஒவ்வொரு வீட்டு வேலையையும் முழுவதும் செய்தால் வீட்டு வேலைக்கான 50 சதவீத புள்ளிகள் கொடுக்கப்படும். குறைவாகச் செய்திருந்தால், அதற்கேற்ப புள்ளிகள் கொடுக்கப்படும். மிகுதி 50 சதவீதப் புள்ளிகள் பிழை விடாது எழுதுதல், தெளிவாக எழுதுதல் போன்றவற்றுக்குக் கொடுக்கப்படும். ஒவ்வொரு வீட்டு வேலைக்கும் ஆசிரியர் புள்ளிகள் வழங்குவார். மாணவர்கள் பாடசாலைக்கு வராத நாட்களில்

செய்யத் தவறிய வீட்டு வேலையை ஆசிரியரிடம் கேட்டுப் பெற்றுக்கொள்ளுவது பெற்றோர் அல்லது மாணவரது பொறுப்பாகும்.

## வாசிப்பு மதிப்பீட்டுக்குரிய (Reading Assessment) விதிமுறைகள்

1. ஒரு வகுப்பைச் சேர்ந்த எல்லா மாணவர்களுக்கும் ஒரே விடயம்(கள்) வாசிக்கக் கொடுக்கப்படும்.
2. பங்குபற்றும் மாணவர்கள் மதிப்பீடு ஆரம்பிக்க முன்னர் பாடசாலைக்கு சமூகம் அளிக்க வேண்டும்.
3. வகுப்பு ஆசிரியர்கள், நடுவர்களாக இருந்து மதிப்பீட்டுப் புள்ளிகள் வழங்குவார்கள்.
4. படித்த பாடங்கள் முழுவதிலும் இருந்து ஒரு பகுதியில் மதிப்பீடு நடைபெறும். பிழை விடாது வாசித்தல், தெளிவாக வாசித்தல், சரளமாக வாசிப்பது போன்றவற்றுக்குப் புள்ளிகள் கொடுக்கப்படும். எந்தப் பகுதியில் மதிப்பீடு நடைபெறும் என்று முன்கூட்டியே தெரிவிக்கப்பட மாட்டாது.
5. ஆண்டு 7 மற்றும் அதற்கு மேற்பட்ட வகுப்புக்களில் உள்ள மாணவர்களுக்குப் படித்த பாடங்கள் முழுவதிலும் இருந்து ஒரு பகுதியும், படிக்காத ஒரு பகுதியிலிருந்தும் வாசிப்புமதிப்பீடு நடைபெறும். படித்த பாடங்களை வாசிப்பதற்கு 65 சதவீத புள்ளிகளும், படிக்காத பாடங்களை வாசிப்பதற்கு 20 சதவீத புள்ளிகளும், கேட்கப்படும் ஒவ்வொரு சரியான பதிலுக்கும் 5 புள்ளிகள் வீதம் கொடுக்கப்படும்.
6. தொடர் மதிப்பீட்டின் இறுதிபுள்ளிகள் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறு கணிப்பீடு செய்யப்படும்.

| மதிப்பீட்டுக் காரணிகள் | ஆரம்பப்பள்ளி முதல் ஆண்டு 10 வரை மற்றும் விசேடவகுப்புகள் |
|---|---|
| முதலாம் தவணை மதிப்பீடு | 15% |
| இரண்டாம் தவணை மதிப்பீடு | 20% |
| மூன்றாம் தவணை மதிப்பீடு | 25% |
| நான்காம் தவணை மதிப்பீடு | 30% |
| பாடசாலை வரவு | 10% |
| மொத்தம் | 100% |

## ஆண்டு 10 HSC முதல் ஆண்டு 12 HSC வரை வரையான மாணவர்களின் மதிப்பீட்டு விதிமுறைகள்.

மேல் வகுப்புகளில் கற்கைப்பகுதிகள் மாணவர்களை நியூ சவுத் வேல்ஸ் உயர்வகுப்பு (HSC) பரீட்சைக்கு தயார்படுத்தும் வகையில் திட்டமிட்டு நடாத்தப்படுகின்றன. இதன்படி மதிப்பீடுகளும் கேட்டுப் பதிலளித்தல், வாசித்துப் பதிலளித்தல், எழுத்தாக்கம், வாய்மொழித்தொடர்பாடல் என்று நான்கு பகுதிகளில் மதிப்பிடப்படுகின்றன.

ஒவ்வொரு தவணையும் அந்தந்த பகுதிகளில் பெற்ற புள்ளிகளை விகிதாசார அடிப்படையில் கொண்டு தொடர் மதிப்பீட்டின் புள்ளிகள், கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறு கணிப்பீடு செய்யப்படும்.

| மதிப்பீட்டுக் காரணிகள் | ஆண்டு 10 HSC முதல் ஆண்டு 11 HSC வரை | ஆண்டு 12 HSC |
|---|---|---|

| | | |
|---|---|---|
| முதலாம் தவணை மதிப்பீடு | 10% | 30% |
| இரண்டாம் தவணை மதிப்பீடு | 15% | 30% |
| மூன்றாம் தவணை மதிப்பீடு | 25% | 30% |
| நான்காம் தவணை மதிப்பீடு | 40% | - |
| பாடசாலை வரவு | 10% | 10% |
| மொத்தம் | 100% | 100% |

# போட்டிகள்

### பேச்சும் வாய்மொழித் தொடர்பாடலும் போட்டி

இந்த போட்டிக்கான விதிமுறைகளும் வழிகாட்டல்களும் Speech & Verbal Competition Rules and Guidelines_WTSC_ 2025 எனும் ஆவணத்தில் உள்ளன. இதனை எமது பாடசாலை இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
**WTSC Website → Students → Competitions → Speech and Verbal Competitions 2025**

**இணையதள இணைப்பு :**
**https://www.wtsc.org.au/wp-content/uploads/2025/04/155-Speech-Verbal-Competition-Rules-and-Guidelines_WTSC_-2025.pdf**

## தமிழ் அறிவு (வினா விடை) போட்டி

இந்த போட்டிக்கான விதிமுறைகளும் வழிகாட்டல்களும் WTSC Quiz Competition Guidelines_WTSC_2025 எனும் ஆவணத்தில் உள்ளன. இதனை எமது பாடசாலை இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**WTSC Website → Students → Competitions → Quiz Competitions**

**இணையதள இணைப்பு :**
**https://www.wtsc.org.au/wp-content/uploads/2024/10/Quiz-Competition-Guidelines-Updated-6-10-2024.pdf**

# பரிசில்கள் வழங்குவதற்கான விதிமுறைகள்

ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்களின் உயர் புள்ளி 100% இற்கு தரப்படுத்தப்பட்டு (standardised) அதிலிருந்து மற்றைய மாணவர்களின் புள்ளிகள் அதற்கேற்ப வரிசைப்படுத்தப்பட்டு தரம் பிரிக்கப்படும். 35 புள்ளிகளிற்கு மேல் எடுத்தவர்கள் மாத்திரமே பரிசில்களுக்குத் தகுதி வாய்ந்தவர்களாவர். போட்டிக்கான பெறுபேறுகள் முதலாம், இரண்டாம், மூன்றாம் பிரிவுகள் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். ஒரு வகுப்பில் போட்டியில் 35 இற்கு மேல் புள்ளிகள் எடுத்த மாணவர்களின் புள்ளிகள் வரிசைப்படுத்தப்பட்டு கீழ் தரப்பட்ட அட்டவணையில் உள்ளவாறு பரிசில்கள் வழங்கப்படும்.

**ஆரம்பப் பள்ளி முதல் ஆண்டு 10 வரை மற்றும் இணைப்பு வகுப்புக்கள்:**

| | |
|---|---|
| 90 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுதவர்கள் அத்துடன் முதல் 20% மாணவர்கள். | முதலாம் பிரிவு |
| 80 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் (90 புள்ளிகளுக்குக் கீழ்) அத்துடன் அடுத்த 20% மாணவர்கள். | இரண்டாம் பிரிவு |
| 70 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் (80 புள்ளிகளுக்குக் கீழ்) அத்துடன் அடுத்த 20% மாணவர்கள். | மூன்றாம் பிரிவு |
| 35 அல்லது 35 புள்ளிக்கு மேல் எடுத்த எஞ்சியுள்ள மாணவர்கள். | திறமைச் சான்றிதழ் |
| 35 புள்ளிகளுக்குக் குறைவான புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள். | பங்குபற்றியமைக்கான சான்றிதழ்கள் |

**ஆண்டு 10 HSC முதல் ஆண்டு 12 HSC வரை**

| | |
|---|---|
| 85 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் | முதலாம் பிரிவு |
| 70 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள். (85 புள்ளிகளுக்குக் கீழ்) | இரண்டாம் பிரிவு |
| 60 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் எடுத்தவர்கள் (70 புள்ளிகளுக்குக் கீழ்) அத்துடன் அடுத்த 20% மாணவர்கள். | மூன்றாம் பிரிவு |
| 50 புள்ளிகளுக்கு மேல் எடுத்த மாணவர்கள். | திறமைச் சான்றிதழ் |
| 50 புள்ளிகளுக்கு குறைவான புள்ளிகள் பெற்ற மாணவர்கள். | பங்குபற்றியமைக்கான சான்றிதழ்கள் |

# அமைச்சர் விருது (Minister Award)

நியூ சவுத் வேல்ஸ் மாநில அரசாங்கத்தின் சமுதாய மொழிப் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் மேற்பிரிவு மற்றும் கிழ்ப்பிரிவு என்னும் இரு நிலைகளில் ஒவ்வொரு மொழிப் பாடசாலை மாணவர்களுக்கும் சிறப்புப் பரிசில்கள் மாநில மட்டத்தில் வழங்கப்படும். இவ் அமைச்சர் விருதுக்கு உங்கள் பிள்ளைகளைப் பரிந்துரை செய்ய விரும்பினால், விண்ணப்பப் படிவத்தை முழுமையாக நிரப்பி சான்றிதழ்களுடன் முடிவுத் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் ஒரு சிறந்த மாணவர் தெரிவு செய்யப்பட்டு பாடசாலையினால் பரிந்துரை செய்யப்படுவார்.

## மாணவ முதல்வர்கள்

ஆண்டு 11 HSC வகுப்பில் கற்கும் மாணவர்களினால் பூர்த்தி செய்யப்பட மாணவ முதல்வருக்கான விண்ணப்ப படிவம் (Prefects Application Form) மதிப்பாய்வு செய்யப்பட்டு மாணவமுதல்வர்கள் பாடசாலை நிர்வாகத்தால் தெரிவுசெய்யப்படுவார்கள்.

மாணவ முதல்வர்களின் கடமைகள்

- பாடசாலை விதிமுறைகள் மற்றும் சுய ஒழுக்கத்தை பின்பற்றுவதோடு மற்ற மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருத்தல்.
- பாடசாலை ஒன்றுகூடல், நிகழ்ச்சிகளில் மாணவர்களை வழிநடத்தல்.
- மாணவர்களின் கருத்துகள், பிரச்சனைகள் மற்றும் தேவைகளை அதிபர் அல்லது ஆசிரியரிடம் எடுத்துச் சொல்வது.
- பாடசாலையின் மதிப்பையும் கௌரவத்தையும் பாதுகாத்தல்
- புதிய மாணவர்களுக்கு வழிகாட்டுதல்

# உயர் தரம் (HSC)

ஆண்டு 10 HSC முதல் ஆண்டு 12 HSC வரையான வகுப்புக்கள் மேலதிக கவனத்துடன் நிர்வகிக்கப்படுகின்றன. இவ் வகுப்புக்களிற்குத் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். மாணவர்களின் தொடர்ச்சியான தமிழ்க் கல்வி முன்னேற்றத்தை உறுதிசெய்யும் பொருட்டு உயர்தரத்திற்கு உள்ளக இணைப்பாளராக உயர்தர ஆசிரியர் ஒருவர் கடமையாற்றுகிறார். ஆண்டு 11 HSC மற்றும் ஆண்டு 12 HSC இல் உள்ள மாணவர்களின் பிரதான பாடசாலைகளுடனான தொடர்பாடல்களை மேம்படுத்த வெளிவாரி இணைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். வெளிவாரி இணைப்பாளர் உயர்தரப் பரீட்சை விண்ணப்பங்களைப் பிரதான பாடசாலையூடாக சமர்ப்பிக்கின்றார். மாணவர்களின் மதிப்பீட்டுப் புள்ளிகளைச் சரிபார்த்து மாணவர்களின் பிரதான பாடசாலைக்கு உரிய நேரத்தில் வழங்குவதையும் இவர் உறுதிப்படுத்துகின்றார். மாணவர்களின் மதிப்பீட்டுப் புள்ளிகள் அதிபர்கள், உள்ளக மற்றும் வெளிவாரி இணைப்பாளர்கள் மற்றும் நிர்வாகக் குழுத் தலைவர் அடங்கிய குழுவினால் சரிபார்க்கப்படுகிறது. உயர்தர வகுப்புக்களின் கல்வி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு பாடவிதான மேற்பார்வையாளராக நியூ சவுத் வேல்ஸ் கல்வித் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட (பதிவு செய்யப்பட்ட) ஆசிரியர் ஒருவர் கடமையாற்றுகிறார்.

எமது மாணவர்கள் நியூ சவுத் வேல்ஸ் கல்வித் திணைக்களத்தின் ஆண்டு 11 மற்றும் ஆண்டு 12 இற்கான பாடத்திட்டத்திற்கமைய (படிநிலை 6) பிரதான பாடசாலையில் உயர்தரப் பரீட்சைக்குத் தமிழ் மொழியை ஒரு பாடமாக எடுக்கின்றனர். இது அவர்களின் உயர்தரப் பரீட்சையில் பல்கலைக் கழக அனுமதிக்கு 2 அலகுகளாகக் (2 Units) கருதப்படுகின்றது.

உயர்தரத்தில் தமிழைக் கற்கும் மாணவர்கள், பின்வரும் பாட அலகுகளை நியூ சவுத் வேல்ஸ் கல்வித் திணைக்களத்தின் பாடவிதானத்திற்கு ஏற்பக் கற்கின்றார்கள்.

1. Oral - கலந்துரையாடல்
2. Listening and Responding (LR) - கேட்டலும் பதிலளித்தலும்.
3. Reading,Listening and Responding (RL) - வாசித்தல்,கேட்டல் பதிலளித்தல்.
4. Reading and Responding (RR) - வாசித்தலும் பதிலளித்தலும்
5. Writing – எழுத்தாக்கம்

தகுதியும் அனுபவமும் மிக்க ஆசிரியர்களால் இப்பாட அலகுகள் கற்பிக்கப்படுகின்றன. பெற்றோர் ஆசிரியர் சந்திப்புக்கள் நடைபெற்று மாணவர்களின் தமிழ்க் கல்வி முன்னேற்றம் உறுதிப்படுத்தப்படுகிறது. தொடர்ச்சியான மதிப்பீடுகள் மாணவர்களின் தமிழ் அறிவு மட்டத்தை அளவிடும், மாணவரின் கல்வி முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளவும் உதவுகின்றன. மாணவர்களின் மதிப்பீட்டு அடைவுகள் பெற்றோர்களிற்கு விரிவான மாணவர் அறிக்கையூடாக வழங்கப்டுகின்றன.

ஆண்டு 10 HSC மாணவர்களுக்கு பாடசாலை வாரங்களில் சனிக்கிழமைகளில் பிற்பகல் 1:30 மணி முதல் 5:30 மணி வரையிலும் வகுப்புகள் நடைபெறுகின்றன. மாணவர்களுக்கு அதிக நேரம் பேசுவதற்கு வாய்ப்பு வழங்குமுகமாக வாய்மொழித் தொடர்பாடல் இரு வகுப்புகளாக நடத்தப்படுகிறது.

ஆண்டு 11 இற்கு பாடசாலை வாரங்களில் சனிக்கிழமைகளில் பிற்பகல் 1:30 மணி முதல் 5:30 மணி வரையும், மேலதிகமாக வியாழக்கிழமைகளில் இரவு 7:00 மணி முதல் 9.00 மணி வரையிலும் வகுப்புகள் நடைபெறுகின்றன வகுப்புகள் நடைபெறுகின்றன. வாய்மொழித் தொடர்பாடல் வகுப்பு இரண்டு பகுதிகளாக (Conversation and Discussion) நடாத்தப்படுகிறது.

ஆண்டு 12 மாணவர்களுக்கு பாடசாலை வாரங்களில் சனிக்கிழமைகளில் பிற்பகல் 1:30 மணி முதல் 5:30 மணி வரையும், மேலதிகமாக வியாழக்கிழமைகளில் இரவு 7:00 மணி

முதல் 9.00 மணி வரையிலும் வகுப்புகள் நடைபெறுகின்றன. விடுமுறைக் காலங்களில் மேலதிக வகுப்புகள் நடத்தப்படுகின்றன. வாய்மொழித் தொடர்பாடல் வகுப்பு இரண்டு பகுதிகளாக (Conversation and Discussion) நடாத்தப்படுகிறது. மாணவர்களின் வாய்மொழி தொடர்பாடலில் ஆய்வும் கலந்துரையாடலும் பகுதிக்கு வளவாளர்களாக தமிழ் மொழி, கலை, இலக்கியம், கவிதை, இசை, நாடகம், நாட்டியம், கூத்து மற்றும் இயல் ஆகிய துறைகளில் விற்பன்னர்களான தமிழறிஞர்கள் உதவி புரிகிறார்கள்.

ஆண்டு 10, 11 மற்றும் 12 மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்தில் தகவல்களை பரிமாறும் கலந்துரையாடல்கள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இதில் நிர்வாகக்குழு, அதிபர்கள், இணைப்பாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் உயர்தரம் பற்றிய தகவல் வழங்கும் கூட்டம் நடைபெறுகிறது. இதில் ஆண்டு 7 முதல் 12 வரை கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள் கலந்து உயர்தரப் பரீட்சை பற்றியும் உயர்தர வகுப்புகள் பற்றியும் அறிந்துகொள்ளலாம்.

எமது பாடசாலையின் HSC வகுப்புகளுக்குரிய விபரக்கொத்து கீழே இணைக்கப்பட்டுள்ளது. அதற்குரிய இணைப்புகளை சொடுக்குவதன் மூலம் அந்த விபரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

Year 11 2025 - HSC Student Handbook (Add WTSC web link)

Year 12 2025 - Student Handbook  (Add WTSC web link)

பின்வரும் இணைப்பைப் பயன்படுத்தி நியூ சவுத் வேல்ஸ் கல்வித் திணைக்களத்தின் ஆண்டு 11 மற்றும் ஆண்டு 12 இற்கான பாடத்திட்டத்தினைப் பெற்றுக்கொள்ளலாம் (படிநிலை 6):
Tamil Continuers Stage 6 Syllabus (2023)
https://educationstandards.nsw.edu.au/wps/portal/nesa/11-12/stage-6-learning-areas/stage-6-languages/continuers/tamil-continuers-syllabus-2023

# நியூ சவுத் வேல்ஸ் கல்வித் திணைக்களத்தின் தமிழ் பாடத்திட்டம்

NESA K-10 TAMIL SYLLABUS

நியூ சவுத் வேல்ஸ் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பப் பள்ளி முதல் ஆண்டு 10 வரையான பாடத்திட்டத்தினை பின்வரும் இணைப்பைப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ளலாம் (படிநிலை 1 முதல் 5 வரை):

NESA K-10 TAMIL SYLLABUS TAMIL K–10 SYLLABUS
https://curriculum.nsw.edu.au/learning-areas/languages/modern-languages-k-10-2022/overview

# முன்னைய பதிப்புகள்

| | |
|---|---|
| முதற்பதிப்பு தை 1999 | First Edition January 1999 |
| இரண்டாம் பதிப்பு தை 2003 | Second Edition January 2003 |
| மூன்றாம் பதிப்பு தை 2004 | Third Edition January 2004 |
| நான்காம் பதிப்பு மாசி 2005 | Fourth Edition February 2005 |
| ஐந்தாம் பதிப்பு தை 2006 | Fifth Edition January 2006 |
| ஆறாம் பதிப்பு மாசி 2007 | Sixth Edition February 2007 |
| ஏழாம் பதிப்பு தை 2008 | Seventh Edition January 2008 |
| எட்டாம் பதிப்பு தை 2009 | Eight Edition January 2009 |
| ஒன்பதாம் பதிப்பு தை 2010 | Ninth Edition January 2010 |
| பத்தாம் பதிப்பு தை 2011 | Tenth Edition January 2011 |
| பதினோராம் பதிப்பு தை 2012 | Eleventh Edition January 2012 |
| பன்னிரண்டாம் பதிப்பு தை 2013 | Twelfth Edition January 2013 |
| பதின்மூன்றாம் பதிப்பு தை 2014 | Thirteenth Edition January 2014 |
| பதின்நான்காம் பதிப்பு தை 2015 | Fourteenth Edition January 2015 |
| பதினைந்தாம் பதிப்பு தை 2016 | Fifteenth Edition January 2016 |
| பதினாறாம் பதிப்பு ஆனி 2016 | Sixteenth Edition June 2016 |
| பதினேழாம் பதிப்பு ஆனி 2017 | Seventeenth Edition June 2017 |
| பதினெட்டாம் பதிப்பு தை 2018 | Eighteenth Edition January 2018 |
| பத்தொன்பதாம் பதிப்பு பங்குனி 2019 | Nineteenth Edition March 2019 |
| இருபதாம் பதிப்பு பங்குனி 2020 | Twentieth Edition March 2020 |
| இருபத்தியோராம் பதிப்பு சித்திரை 2021 | Twenty first Edition April 2021 |
| இருபத்திரண்டாம் பதிப்பு சித்திரை 2022 | Twenty second Edition April 2022 |
| இருபத்திமூன்றாம் பதிப்பு ஆனி 2023 | Twenty third Edition June 2023 |
| இருபத்திநான்காம் பதிப்பு ஐப்பசி 2024 | Twenty Fourth Edition October 2024 |
| இருபத்திநான்காம் பதிப்பு வைகாசி 2025 | Twenty Fourth Edition May 2025 |